Register No. | | | | | | | | |

**TA6A**

6557–25

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

HUMAN RIGHTS LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe the significance of the protection of Human Rights as envisaged under the Charter of United Nations.

   ஒன்றிய நாடுகள் அமைப்புப் பட்டயத்தில் கூறப்பட்டுள்ள மனித உரிமைகளின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

2. Explain the provisions relating to First Generation of Human Rights.

   முதல் தலைமுறை மனித உரிமைகள் பற்றிய கூறுகளை விளக்குக.

3. Explain the composition, powers and functions of the State Human Rights Commission.

   மாநில மனித உரிமை ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the rights of Vulnerable Groups.

   பலவீனமான குழுவினரின் உரிமைகளை விவாதிக்கவும்.

5. Write on essay on origin and development of International Humanitarian Law.

   சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் மூலம் மற்றும் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. Explain the role played by the Indian Judiciary and Legislature in protecting the rights of aged persons.

முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்திய நீதித்துறை மற்றும் சட்டமன்றம் ஆற்றிய பங்கை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

(a) Natural Law.

இயற்கை நியதிச் சட்டம்.

(b) French Declaration.

பிரஞ்சு நாட்டின் விளம்புகை.

(c) Human Rights Council.

மனித உரிமைகள் மாமன்றம்.

(d) Paramananda Katara v. Union of India.

பரமானந்த கட்டாரா எதிர் இந்திய யூனியன்.

(e) Child Labour.

குழந்தை தொழிலாளர்.

(f) Right to free legal aid.

இலவச சட்ட உதவி உரிமை.

(g) Detenue's right to representation.

காவலில் வைக்கப்பட்டுள்ளவரின் முறையீட்டு உரிமை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A person got injured in an accident and was taken to the Private Hospital for the treatment. The Doctor refused to provide treatment without procedural formalities being completed. As a result of this, the injured person died of profused bleeding. Decide.

ஒரு விபத்தில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். சட்ட நடைமுறைகள் முழுமை பெறாததால் சிகிச்சை அளிக்க டாக்டர் மறுத்து விடுகிறார். தொடர் இரத்தப் போக்கின் காரணமாகக் காயமடைந்தவர் இறந்து போகிறார். தீர்மானிக்கவும்.

9. A citizen who was in preventive detention under Defence of India rules, wrote a book on science with the permission of the Government. But he was denied permission to send the same out of the prison for publication. Decide.

இந்திய பாதுகாப்பு விதிகள் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு இந்திய குடிமகன் அரசு அனுமதியோடு ஒரு அறிவியல் புத்தகம் எழுதினார். பின் அதை வெளியீடு செய்ய சிறைக்கு வெளியே அனுப்பிட அரசு அனுமதி மறுத்தது. தீர்மானிக்கவும்.

10. Children below 14 years of age were employed in a match factory. The employers of the factory gave meagre wages to the child workers. The government authorities found out and ordered closure of the factory. Is the Act of the Government valid? Decide.

தீக்குச்சித் தொழிற்சாலையில் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மிக குறைந்த ஊதியமே வழங்கினர். இது அரசாங்க அதிகாரிகளுக்கு தெரிய வந்து தொழிற்சாலையை இழுத்து மூட உத்தரவிட்டனர். அரசின் இந்த நடவடிக்கை செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்

---

Register No. | | | | | | | | |

**TA6B** **6558–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Analyse Bonger's economic theory of criminality with the present scenario.

பாங்கரின் பொருளாதார புனைக்கருத்துருவினை இன்றைய கால கட்டத்திற்கு ஏற்றார் போல கூராய்வு செய்க.

2. Explain the "Classical School", "Neo-Classical School" and "Positive School" of Criminology.

குற்ற ஆய்வியலின் "பண்டைய கருத்தியல் பயில் நெறியம்", "பண்டைய கருத்தியலுக்கு பிந்தைய பயில் நெறியம்" மற்றும் "நேர்நிலை கொள்கை பயில் நெறியம்" ஆகியவற்றைப் பற்றி விளக்குக.

3. Explain the salient features of the Probation of Offenders Act, 1958.

குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு விடுதலைச் சட்டம், 1958-ன் முக்கிய அம்சங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the influence of family on causation of crime.

குற்றம் நடைபெறுவதில் குடும்பத்தின் தாக்கத்தினைப் பற்றி விவாதிக்கவும்.

5. Explain the various prison systems.

பல்வேறு சிறை அமைப்புகளைப் பற்றி விளக்கவும்.

6. What are the arguments in favour of retention of capital punishment?

மரண தண்டனையை தக்க வைத்தலுக்கான ஆதரவான வாதங்கள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Cyber crime
கணினி குற்றம்

(b) Juvenile
இளஞ்சிறார்

(c) Criminal tribes
குற்ற இனக் குழுக்கள்

(d) Victimology
பாதிக்கப்பட்டோரியல்

(e) Ecology of crime
குற்றச் சூழலியல்

(f) Free will theory
ஆர்வத் தேர்வு புனைக்கருத்துரு.

(g) Garafalo.
கோராஃபெலோ.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', a famous actress raised complaint against 'B', a movie director for sexually abusing her 5 years before. Discuss the nature of complaint.

'அ' என்ற புகழ்பெற்ற சினிமா நடிகை, 'ஆ' என்ற சினிமா இயக்குநர் தன்னை 5 வருடத்திற்கு முன்னர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக புகார் அளிக்கிறார். புகாரின் தன்மையினை விவாதிக்கவும்.

9. A, though he is a CEO of the company has the habit of stealing small things. Discuss the behaviour of A with relevant to Criminological theory.

A என்பவர் ஒரு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்தபோதிலும், அவர் சிறு சிறு பொருட்களைத் திருடும் பழக்கத்தினை கொண்டிருந்தார். தொடர்புடைய குற்றவியல் கோட்பாட்டுடன் A-யுடைய நடத்தையைப் பற்றி விவாதிக்கவும்.

10. A, is a retired officer who has been summoned for an inquiry by the Deputy Superintendent of Police (DSP) of a vigilance office. A, however, refuses to cooperate and does not answer to any questions during interrogation. Decide the legal implications with relevant legal provisions.

A என்ற ஓய்வு பெற்ற அதிகாரியை விசாரணைக்கு வருமாறு ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் அழைத்துள்ளார். ஆனால் A விசாரணைக்கு எவ்வித ஒத்துழைப்பும் தர மறுத்து மற்றும் கேள்விகளுக்கும் பதிலளிக்கவில்லை. சட்டப்பூர்வ விளைவுகளை தொடர்புடைய சட்ட நடைமுறைகளுடன் விவரிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA6C**

**6767–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, MAY 2025

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

INTELLECTUAL PROPERTY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the concept of "Fair use" by referring to the law laid down in Super Cassettes Industries Ltd -vs- Hamar Television Network Pvt. Ltd.

   "நியாயமான பயன்பாடு" என்ற கோட்பாட்டை சூப்பர் கேசட் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் -vs- ஹாமர் டெலிவிஷன் நெட்ஒர்க் பிரைவேட் லிமிடெட்-இல் வகுக்கப்பட்டுள்ள சட்டத்தை குறிப்பிட்டு விளக்கவும்.

2. An infringement action is a Statutory remedy while passing off action is a Common Law remedy. Discuss it with the help of decided cases and point out the difference between passing off action and infringement action.

   ஒரு உரிமை மீறல் செயல் என்பது சட்டப்பூர்வ தீர்வாகும். அதே சமயம் வணிகப் போலி என்பது இயற்றப்படாத சட்டத்தின் தீர்வாகும். இதனை ஏற்கனவே முடிவெடுக்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் விளக்குக. மற்றும் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை விவரிக்கவும்.

3. What is an invention within the meaning of the Patents Act, 1970? What are the inventions that can be Patentable and Non-Patentable?

   காப்புரிமை சட்டம் 1970ன் கீழ் "கண்டுபிடிப்பு" என்றால் என்ன? எந்தக் கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை கோர முடியும் மற்றும் எந்தக் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை கோர இயலாது.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is deceptive similarity? Explain the Law relating to deceptively similar mark.

ஏமாற்று வகை ஒத்த தன்மையுள்ள குறி என்றால் என்ன? இதனைப் பற்றிய சட்டத்தினை விளக்குக.

5. Copyright is a bundle of rights. Explain it in detail.

பதிப்புரிமை என்பது உரிமைகளின் தொகுப்பாகும். அதை விரிவாக விளக்குக.

6. Explain the meaning of Design applied to articles and protection provided to it under the Designs Act, 2000.

வடிவமைப்புச் சட்டம் 2000-ன் கீழ் பொருட்களுக்கு பயன்படுத்தப்படும் வடிவமைப்பின் அர்த்தத்தையும் அதற்கு வழங்கப்படும் பாதுகாப்பையும் விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Explain the conditions for registration of Geographical Indications.

புவிசார் குறியீடுகளை பதிவு செய்வதற்கான நிபந்தனைகளை விளக்குக.

(b) What are the different classes of work on which copyright shall subsist?

பதிப்புரிமை தொடரும் பல்வேறு வகையான படைப்புகள் எவை?

(c) Write the salient features of the Paris Convention for Protection of Industrial Properties 1883.

1883 ஆம் ஆண்டு தொழில் துறை சொத்துகளைப் பாதுகாப்பதற்கான பாரிஸ் மாநாட்டின் முக்கிய அம்சங்களை எழுதுங்கள்.

(d) Explain the concept of Ever-greening of Patents. Discuss its validity.

காப்புரிமையாளர்களின் நிரந்தரப் பெருக்கத்தின் கருத்தை விளக்குங்கள். அதன் செல்லுபடித் தன்மையைப் பற்றி விவாதிக்கவும்.

(e) Explain the classification of Intellectual Property.

அறிவுசார் சொத்து வகைப்பாட்டை விளக்குங்கள்.

(f) Explain the concept of Traditional Knowledge.

பாரம்பரிய அறிவின் கருத்தை விளக்குங்கள்.

(g) Define Industrial design.

தொழிலக வடிவமைப்பை வரையறு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "Raja" a film Director wants to make a movie based on a published novel. Advise him the steps to be taken by him to make the movie without infringement of copyright.

"ராஜா" ஒரு திரைப்பட இயக்குனர். வெளியிடப்பட்ட நாவலை அடிப்படையாகக் கொண்டு ஒரு திரைப்படத்தை உருவாக்க விரும்புகிறார். பதிப்புரிமை மீறல் இல்லாமல் திரைப்படத்தை உருவாக்க அவர் எடுக்க வேண்டிய முயற்சிகள் குறித்து அவருக்கு அறிவுறுத்துங்கள்.

9. Shoe manufacturing company wants to use the trademark TATA for his product. He has no connection with TATA Company. Discuss.

காலணி உற்பத்தி நிறுவனம் தனது வணிகத்திற்கு "டாடா" என்னும் வணிக முத்திரையை பயன்படுத்த விரும்புகிறது. அவருக்கும் "டாடா" நிறுவனத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. விளக்குக.

10. "Nasovid" a pharmaceutical company obtained a Patent for the medicine. Later the Patentee made further improvements in the patented medicine. Can he protect such improvements?

"நாசோவிட்" என்னும் மருந்து நிறுவனம், தனது மருந்திற்காக காப்புரிமையைப் பெற்றுள்ளது. பிறகு, காப்புரிமையாளர், தான் பெற்ற காப்புரிமை மருந்தில் ஒரு சில முன்னேற்றங்களைக் கொண்டு வருகிறார். அவர் கண்டுபிடித்த இந்த முன்னேற்றங்களுக்கு பாதுகாப்பு கோர இயலுமா?

---